[7th April 1960

Town Bus Services

* 600 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state how many municipalities have applied for permission to ply town bus services ?

The Hon. Sri V. RAMAIAH : Four Municipal Councils recently applied for permission to run bus services.

Sri S. LAZAR : How many have been permitted, Sir ?

The Hon. Sri V. RAMAIAH : So far none.

Express Bus Services

* 601 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1958–59, 1959–60-ல் எந்தெந்த மார்க்கங்களில் எக்ஸ்பிரஸ் பஸ்கள் விட லைசென்சு கொடுக்கும்படியாக பொது ஜனங்களிடமிருந்து சர்க்காருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன ?

(ஆ) எந்தெந்த மார்க்கங்களிலே பஸ்கள் விட லைசென்சுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) A statement [a] containing the particulars is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : சார், மேஜை மீது வைக்கப்பட்டுள்ள குறிப்பிலே, 1958–59-ல் 11 பஸ் ரூட்டுகளுக்கு தேவையென்று விண்ணப்பங்கள் வந்ததில், 4 மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ; அதே போல், 1959–60-ல் 9 ரூட்டுகளுக்கு விண்ணப்பங்கள் வந்திருந்தும், 2 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் ? மற்றவைகளையும் கொடுக்க மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : பஸ் ரூட்டுகள் கொடுக்கும் விஷயத்தில் மீண்டும் பரிசீலனை என்பது இல்லை. தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டேதான் இருக்கிறோம். புதிதாக வரக்கூடிய கோரிக்கைகளையெல்லாம் உடனடியாகக் கொடுத்துவிடுவது என்பது முடியாத காரியம். அவற்றின் அவசியத்தை நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது. வந்த கோரிக்கைகளுக்கெல்லாம் அனுமதி கொடுத்துவிட முடிவதில்லை. எந்த குறித்த ரூட்டுகள் அவசியமோ, அவை மட்டும்தான் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கேட்ட ரூட்டுகளையெல்லாம் கொடுத்துவிடுவது என்பது தொழிலுக்குப் பாதகமாக முடியும் என்பது என் கருத்து.

Srimathi P. K. R. LAKSHMIKANTHAM : தலைவர் அவர்களே, எக்ஸ்பிரஸ் பஸ் ரூட்டுகளுக்கு லைசென்சு அளிப்பதில், விண்ணப்பதாரர்களுக்கு என்ன தகுதி எதிர்பார்க்கிறார்கள் ?

The Hon. Sri V. RAMAIAH : சாதாரண பஸ் ரூட்டுக்குப் போல்தான் ; எக்ஸ்பிரஸ் ரூட்டுக்குத் தேவையிருக்கிறதா என்பதை அனுசரித்து அதிகாரிகள் முடிவு செய்வார்கள்.

---

[a] Printed as Appendix I on pages 148–150 infra.